# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

2012ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய(பல்லாண்டுக்கான மின்கட்டண வீதத்திட்டத்தின்படி மாநிலத்திற்குள் மின்செலுத்தல் / மின்பகிர்மானத்திற்கான மின்கட்டண வீதத்தை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறைவிதிகளுக்குரிய திருத்தம்.

**(அறிவிக்கை எண். த.மி.ஒ.ஆ/ப.ஆ.மி(MYT) 18/3, 28.11.2012 நாளிட்டது)**
(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 61ஆம் பிரிவின்படி தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இதன்மூலம் 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய(பல்லாண்டுக்கான மின்கட்டண வீதத்தின்படி மாநிலத்திற்குள் மின்செலுத்தல்/ மின்பகிர்மானத்திற்கான மின்கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறைவிதிகளுக்கு பின்வரும் திருத்தத்தைக் குறித்துரைத்துள்ளது. இத்திருத்தத்தின் வரைவானது மேற்சொன்ன 181ஆம் பிரிவின்(3)ஆம் உட்பிரிவின்படி வேண்டுறுத்தப்பட்டவாறு முந்தைய வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

## திருத்தம்

மேற்சொன்ன ஒழுங்குமுறைவிதிகளின் 3ஆம் ஒழுங்குமுறைவிதியில் (i)ஆம் இனத்திற்குப் பதிலாக பின்வரும் இனம் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :—

*"(i) கட்டுப்பாட்டுக்காலம் :*

*பல்லாண்டுக்கான மின்கட்டண வீதத்திட்டத்தின்படியான கட்டுப்பாட்டுக்காலம் 3 ஆண்டுகள் ஆகும். முதல் ஆண்டின் கட்டுப்பாட்டுக் காலத்திற்கு முந்திய ஆண்டு அடிப்படை ஆண்டாகும்."*

எஸ். பாலதண்டாயுதபாணி,
இயக்குனர் (கட்டனவீதம்)
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்